சுற்றுநிருப இல : 2012/19

# பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல்

கல்வி அமைச்சு
“இசுருபாய”
பெலவத்த
பத்தரமுல்ல.

சுற்றுநிருப இல:2012/19

எனது இல: ED/01/12/10/06/01
கல்வி அமைச்சு,
"இசுருபாய",பெலவத்த,
பத்தரமுல்ல.
2012.05.29

மாகாண பிரதான செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பொறுப்பு பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்,

# பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக இதற்கு முன்பு வெளியிடப்பட்ட 2011.05.11 ஆம் திகதியும் இல. 2011/18 இனையும் கொண்ட சுற்றுநிருபத்தினதும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபக் கடிதங்களினதும் அனைத்து அறிவுறுத்தல்களையும் விஞ்சி இச் சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் 2013 ஆம் ஆண்டிலும் அதன் பின்பும் முதலாந் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**2.0 பிள்ளைகளை அனுமதிப்பதற்கான அடிப்படைத் தகைமைகள் :-**

2.1 பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும் வருடத்தின் ஜனவரி மாதம் 31 ஆந் திகதியன்று பிள்ளையின் வயது ஐந்து வருடங்கள் பூரணமாய் இருத்தல் வேண்டும். அதனை உறுதிப்படுத்த பிறப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலையிலுள்ள வெற்றிடங்களுக்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பிள்ளை ஒன்றுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லாதபோது அதற்குப் பதிலாக பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசியொன்றை ஏற்றுக் கொள்ள முடியும். எனினும் பின்பு பிறப்புச்சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (ஐந்து வயதை விடக் குறைவான வயதையுடைய பிள்ளைகளை அனுமதிக்காதிருக்க அதிபர்கள் மிகக் கவனமாய் இருத்தல் வேண்டும்.)

2.2 பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும் வருடத்தின் ஜனவரி மாதம் 31 ஆந் திகதியன்று 06 வயது அல்லது 06 வயதை விடக் கூடிய பிள்ளைகளை, 06 வயதுக்கு குறைந்த, தகைமையுடைய சகல பிள்ளைகளையும் அனுமதித்த பின்னரே சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**3.0 தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்(அனைத்து வகைகளுக்கும் பொருந்தும்)**

3.1 முதலாம் தரத்தின் சமாந்தர வகுப்பொன்றிற்காக 33 பிள்ளைகள் ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் போதும் அவ் 33 பிள்ளைகளுடன் மேலும் இரு பிள்ளைகள் மேன்முறையீடு, எதிர்ப்பைப் பரீட்சிக்கும் போதும் என 35 பிள்ளைகள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக 07 பிள்ளைகள் யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ள / ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் உறுப்பினர்களின் பிள்ளைகளிலிருந்து பாதுகாப்பமைச்சின் சிபாரிசுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

3.2 1960 இன் 5ஆம் இலக்க உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (சிறப்பு விதிகள்) 1961இன் 8ஆம் இலக்க உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக விதிகள்) எனும் சட்ட மூலங்களுக்கு ஏற்ப அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்பும் போது, பொறுப்பேற்ற போது குறித்த பாடசாலையில் இருந்த மாணவர் சமய விகிதாசாரம் கவனத்திற் கொள்ளப்பட்டு வெற்றிட எண்ணிக்கை சமய ரீதியாகவும் வகைகளுக்கேற்பவும் பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும். ஏதாவது சமயப் பிரிவில் ஒரு வகைக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட குறைந்த விண்ணப்பதாரிகள் இருக்குமிடத்து அவ்வெற்றிடங்கள் அச்சமயத்துக்குரிய மற்றைய வகைகளிடையே விகிதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். ஏதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது குறைவாக இருக்குமிடத்து அவை விகிதாசாரத்திற்கு ஏற்ப மற்றைய சமயப் பிரிவினரிடையே பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

3.3 பெற்றோரின் வதிவிடம் ஒரே இடமாக இல்லாமல் அவர்கள் சட்டப்படி பிரியாதவர்களாயின் அவர்கள் சட்டப்படி பிரிவதற்காக நீதிமன்றச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமையை ஆவணங்கள் மூலம் நிரூபிப்பின் விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவரின் (தாய் அல்லது தந்தை) வதிவிடம், பிள்ளையின் வதிவிடமாகக் கொள்ளப்படும்.

3.4 நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் சட்ட ரீதியாக நிரந்தரமாக பிள்ளையை வளர்க்க பொறுப்பாளராக்கப்பட்ட ஒருவரை மாத்திரமே பாதுகாவலராக ஏற்றுக்கொள்ள முடியும். அனாதை இல்லங்களில் வசிக்கும் பிள்ளைகளின் சட்டரீதியான பாதுகாவலராக இல்லப் பொறுப்பாளர் கருதப்படுவார். சட்ட ரிதியாக பிள்ளையை வளர்க்கும் நபர்மூலம் அது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குமுன் பெற்றிருத்தல் வேண்டும்.



2 – CM 014605

3.5 பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்ட எல்லைக்குள் வசித்தல் வேண்டும். ஏதாவது ஒரு பாடசாலை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வேளையில் அடுத்து மாவட்டத்தின் எல்லையில் அண்மித்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிப்போரும் அப்பாடசாலைக்கு விண்ணப்பிக்க முடியும். இது குறித்த பாடசாலையின் போசணைப் பிரதேசம் எனப்படும். பழைய மாணவர்களுக்கு இப்போசணைப் பிரதேச எல்லை விதி ஏற்புடையதாகாது.

3.6 அரசினர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் அல்லது வேறு பாடசாலையொன்றில் முன்னைய வருடத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு பிள்ளை மீண்டும் முதலாம் தரத்தில் அனுமதி பெறத் தகுதியற்றவராவார்.

## 4.0 பிள்ளைகளை அனுமதிப்பதற்காக விண்ணப்பிக்கும் நடைமுறைகள்

4.1 ஒவ்வொரு வருடமும் கல்வி அமைச்சின் மூலம் அடுத்த வருடத்தில் முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிக்க எதிர்பார்க்கும் பெற்றோர்கள், சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் (விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதியுடன்) செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

4.2 பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் தமது பிள்ளை, பாடசாலையொன்றில் அனுமதி பெற விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறின் தான் விரும்பிய, வசதியுடைய பாடசாலைகளுக்கு உரிய வருடத்திற்காக செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் இச்சுற்று நிருபத்தின் பின்னிணைப்பு இல 01 இல் குறிப்பிடப்படும் மாதிரிப்படிவத்திற்கமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் உரிய பாடசாலையின் அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4.3 யுத்த நடவடிக்கைக் கடமைகளுக்காக வழங்கப்படும் விசேட சலுகையின் கீழ் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்க விரும்பும் யுத்தக் கடமைகளில் ஈடுபடும் /ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் அதிகாரிகள், நலன்புரிப் பணிப்பாளர் சபை மூலம் தமது பிரிவிற்கு வழங்கப்படும் விசேட விண்ணப்படிவங்களை ஒழுங்காகப் பூரணப்படுத்தி தமது பிரிவின் மூலம் உரிய நலன்புரிப்பணிப்பாளருக்கு உரிய தினத்திற்கு முன் அனுப்புதல் வேண்டும். ஏனைய அனைத்துப் பெற்றோர்கள் / சட்டரீதியான பாதுகாவலர்கள், உரிய பாடசாலையின் அதிபருக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தமது விண்ணப்பத்துடன் சுயவிலாசமிடப்பட்ட பதிவுத் தபாலுக்கான முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றையும், பிள்ளையை அனுமதிப்பதற்குத் தேவையான தகைமைகள் தொடர்பாக தானே உறுதிப்படுத்திய ஆவணங்களின் பிரதிகளையும் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். வெற்றிட எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்களைப் பெறும் பாடசாலைகளில் மாத்திரம் இவ்விண்ணப்பங்களை நேரடியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். நேரடியாகச் சமர்ப்பிப்பின் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச் சீட்டொன்றினை வழங்குதல் வேண்டும்.

4.4 யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ள / ஈடுபட்ட முப்படைகளினதும், பொலிஸ் உறுப்பினர்களினதும் பிள்ளைகள் நேரடியாக பாடசாலைக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்று இருப்பின் உரிய பாடசாலையின் அதிபருக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

4.5 பெற்றோர்கள் / சட்டரீதியான பாதுகாவலர் ஒரு பாடசாலையில் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு அல்லது இரண்டு போதனா மொழிகளுக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்றிருப்பின் அவ் ஒவ்வொரு வகைக்கும், போதனா மொழிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் தெளிவாக வகையைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

4.6 ஏதாவது ஒரு பாடசாலைக்கு விண்ணப்பித்த ஒருவர் தமக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய வேறு பாடசாலைகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்ப முடியும். இங்கு தேசிய பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் குறைந்த பட்சம் 03 மாகாணப் பாடசாலைகள் உட்பட உயர்ந்த பட்சம் 06 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் விண்ணப்பிக்கும் பாடசாலைகளை முன்னுரிமைப்படி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடல் வேண்டும்.

4.7 இரு போதனா மொழிகளைக் (சிங்களம் / தமிழ்) கொண்ட பாடசாலைகளுக்கு இரு போதனா மொழிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்பினால் இரு போதனா மொழிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும் எனினும் ஒரு போதனா மொழிக்கு பாடசாலையொன்றிற்கு தெரிவானதன்பின் அப்போதனா மொழி மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

## 5.0 தெரிவு செய்வதற்கான நடைமுறைகள்

5.1 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை பாடசாலையில் முதலாம் தரத்தில் பாடசாலை மூலம் அனுமதிக்கக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையை விட குறைவாகக் காணப்படின் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் ஊடாக பிள்ளையின் வயதினை உறுதி செய்து கொண்ட பின்னர் உரிய தினத்தில் பிள்ளையை பாடசாலையில் சேர்த்துக் கொள்ள முடியும்.

5.2 குறித்த தினத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பாடசாலையில் முதலாம் தரத்தில் பாடசாலை மூலம் அனுமதிக்கக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையை விடக் கூடுதலாகக் காணப்பட்டால் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் தெரிவுகள் செய்யப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக் குழு உரிய பாடசாலையின் அதிபர் மூலம் தெரிவு செய்து

கொள்ளல் வேண்டும். இங்கு பாடசாலை அபிவிருத்திக்குழு, அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்போது இக்குழு, சங்கங்களின் நிர்வாகக் குழுவின் இணக்கப்பாட்டுடன் உறுப்பினர்களை நியமித்துக்கொள்ளுதல் வேண்டும். தெரிவைப்பற்றி தேசிய பாடசாலையாயின் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அல்லது செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கும், மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தல் வேண்டும்.

5.3 இந் நேர்முகப் பரீட்சைக்குழுவின் கட்டமைப்பு கீழ் வருமாறு அமைதல் வேண்டும்.

அ. உரிய பாடசாலையின் அதிபர் (தலைவர்)

ஆ உரிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவுப் பொறுப்பாளர் /ஆரம்பப் பிரிவின் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர்

இ. உரிய பாடசாலையில் ஒருவருடத்திற்கு அதிகமான சேவைக்காலத்தைக் கொண்ட பிரதி /உதவி அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் (செயலாளர்)

ஈ பாடசாலை மேம்பாட்டு பாட்சாலை அபிவிருத்திக்குழு/பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் (அப்பாடசாலையின் பழைய மாணவர்,பாடசாலை ஆசிரியர் அல்லாது இருத்தல் வேண்டும்

உ. பழைய மாணவர் சங்க பிரதிநிதியொருவர்.

5.4 உரிய பாடசாலையின் அதிபர் நேர்முகப் பரீட்சைக் குழுவின் தலைவராக செயற்பட வேண்டியதோடு ஒரு வருடத்தை விட அதிகமான சேவைக்காலத்தைக் கொண்ட பிரதி/உதவி அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக் குழுவினதும் மேன்முறையீடு, எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுவினதும் செயலாளராகச் செயற்படுதல் வேண்டும்.

5.5 தமது பிள்ளையொன்று அல்லது பேரன்/ பேத்தி உரிய பாடசாலைக்கு அனுமதி பெற விண்ணப்பித்திருப்பின் அப்பாடசாலையின் நேர்முகப் பரீட்சைக் குழுவில் அவர் அங்கத்துவம் பெற தகைமையற்றவராவார். எனினும் இது அதிபருக்குப்பொருந்தாது. மேலும் அதிபரும் ஆரம்பப் பிரிவுப் பொறுப்பாளர் தவிர்ந்த ஏனைய அனைத்து அங்கத்தவர்களும் உரிய பாடசாலையின் நேர்முகப் பரீட்சைக் குழுவின் கடந்த இரண்டு வருடத்தினுள் அங்கம் வகிக்காதவர்களாக இருத்தல் வேண்டும்.

5.6 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு, பிள்ளைகளைத் தெரிவு செய்தல் தொடர்பான அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு உகந்த வகையில் தீர்மானம் மேற்கொண்டு அதற்கேற்ப செயற்படுவதற்கான அதிகாரம் உண்டு. எனினும் தரப்பட்டுள்ள சுற்று நிருப அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தெரிவு செய்தல் செயற்பாடுகள் நடைபெற வேண்டியதோடு சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வியாக்கியானம் செய்து கொள்ளலும் தெரிவு செய்தலின் போதான பிரச்சினைகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளலும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் பொறுப்பாகும். எனினும் இவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள், வியாக்கியானங்கள் நேர்முகப் பரீட்சைக் குழுவின் தலைவர் மூலம் சம்பவத்திரட்டு புத்தகத்தில் சுருக்கமாக குறிப்பு இடவேண்டியதோடு வேறு ஒரு புத்தகத்திலும் அறிக்கைப் படுத்தி தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கக் கூடியவாறு பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

## 6.0 தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் நடைமுறைகள்

(அ) பாடசாலையொன்றில் முதலாம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களில் ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை, கீழே காட்டப்படும் வகைகளுக்குரிய பிள்ளைகளிடையே இருந்து கீழ்வரும் விகிதாசாரத்திற்கேற்ப பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| i. | பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் | - 50% |
| ii. | குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் | - 25% |
| iii. | தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர / சகோதரிகள் | - 15% |
| iv. | கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் | - 05% |
| v. | அரச தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்ற அரசாங்க / கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபைகள் /அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் | - 04% |
| vi. | பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்து விட்டு வந்தவர்களின் பிள்ளைகள் | - 01% |

ஆ. பிள்ளைகளைத் தெரிவு செய்யும் போது மேற்குறிப்பிட்ட வகையொன்றுக்குரிய பிள்ளைகளின் எண்ணிக்கை பூரணமாகாவிடின் குறையும் பிள்ளைகளின் எண்ணிக்கை, மற்றைய வகைகளிடையே மேற்குறிப்பிடப்பட்ட விகிதாசாரத்திற்கு ஏற்ப பங்கிடப்பட்டு தெரிவு செய்து கொள்ளப்படல் வேண்டும்.

இ. ஒவ்வொரு வகையின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நேர்முகப்பரீட்சைக் குழு மூலம் தெரிவு செய்வதற்கான புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். இங்கு ஆகக் கூடிய புள்ளிகள் 100 ஆகும்.

ஈ. நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கும் ஆவணங்களில் ஒரு ஆவணமாவது சட்ட விரோதமான ஆவணமாக இருப்பின் அக் காரணத்திற்காகவே விண்ணப்பத்தினை நேர்முகப் பரிட்சைக் குழுவிற்கு நிராகரிக்க முடியும்.

உ. வாக்காளர் இடாப்பில் தமது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை தானே கிராம அலுவலர் காரியாலயத்திலுள்ள வாக்காளர் இடாப்புகளுக்கு ஏற்ப குறித்துக் கொண்டு விண்ணப்பதாரியே சான்றுப் படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விபரங்களை குறித்துக் கொள்வதற்காக முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிக்க அனுமதி கோரும் விண்ணப்பப் படிவத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வாக்காளர் இடாப்பில் தாம் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ள பெற்றோர்கள் / சட்ட ரீதியான பாதுகாவலர்கள் இப் பகுதியை கட்டாயம் பூரணப்படுத்துதல் வேண்டும்.

ஊ. வதிவை உறுதிப்படுத்தத் தேவையான ஆவணங்கள் விண்ணப்பிக்கும் போது வசிக்கும் இடத்திற்கு உரியதாக இருத்தல் வேண்டும்.

## 6.1 பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் - 50%

இவ்வகையின் கீழ் போசணைப் பிரதேசத்தினுள் (3.5 உப பிரிவின்படி) வசிக்கும் அனைவருக்கும் விண்ணப்பிக்க முடியும். இங்கு வதிவு முக்கியமாகும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

1. வதிவு :

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல.06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ( வாக்காளர் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படல்வேண்டும்).

- வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியினதும் விண்ணப்பதாரியின் துணையினதும் பெயர்கள் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்காக வருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம் 35 புள்ளிகள்.
  (கடந்த வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்து விண்ணப்பதாரி / துணை வெளிநாடொன்றிற்கு சென்றிருப்பின் அல்லது இறந்திருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்துப் பெற்றிருப்பின் ஆவணங்களைக் கருத்தில் கொண்டு உரிய புள்ளிகளை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்)
- வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் அல்லது துணையின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பின் விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்காக வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள். (உச்சப் புள்ளிகள் 35)

**கவனிக்கவும்:** தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு போசணைப் பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும்போது,கீழ்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகளுக்காகக் குறைக்கப்படும் புள்ளிகள் மாற்றம் பெறாதிருந்தால் மட்டும் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதைய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

II. வதிவினை உறுதிப்படுத்தும் ஆவணம்

உரிய நபருக்கு வதிவினை உறுதிப்படுத்தும் ஆவணம் சொந்தமாக்கப்பட்டு 05 வருடங்கள் அல்லது அதனை விடக் கூடிய காலம் சென்றிருப்பின் முழுமையான புள்ளிகளையும் 05 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையேயான காலத்தினைக் கொண்டிருப்பின் முழுமையான புள்ளிகளில்

காலத்தினைக் கொண்டிருப்பின் முழுப் புள்ளிகளின் 50% ஐயும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

- வதிவிடத்தின் உரித்து உறுதி
  விண்ணப்பதாரியின்/ துணையின் பெயரில் உரித்து உறுதி இருப்பின் - 10 புள்ளிகள்.
  விண்ணப்பதாரியின்/ துணையின் தாயின் அல்லது தந்தையின் பெயரில் உரித்து உறுதி இருப்பின் - 06 புள்ளிகள்
  (ஏனையோரின் பெயரில் இருந்தால் இப்புள்ளிகள் வழங்கப்படக் கூடாது. விகாரைகளைச் சார்ந்த இடங்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் ஆவணங்கள் போன்றன பிரதேசத்திற்கு ஏற்ப ஏற்றுக்கொள்ள முடியும். மேலும் உறுதியின் வரலாற்றினையும் இரண்டாம் பிரதியையும் பரீட்சித்து அத்தாட்சிப் படுத்திக் கொள்ள முடியும்).

**கவனிக்கவும்**: விண்ணப்பதாரியின் பெற்றோரின் பெயரில் வசிப்பிடத்திற்கான உரிமை இருந்து, பின்பு விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரிமை பெறப்பட்டதன் பின் முடிவடைந்த காலம் மூன்று வருடங்களைவிடக் குறைவாக இருப்பின் பெற்றோரின் பெயரிலேயே உரித்துறுதி இருப்பதைப்போன்று கருதி முழுமையாக வசித்த காலம் 05 வருடங்களைவிட அதிகமாயின் மட்டும் 06 புள்ளிகள் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

- பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப் பத்திரம் / அரச உத்தியோக பூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் /சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய உரிமையை உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள் - 04 புள்ளிகள்
  (பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போர் இதில் சேர்த்துக் கொள்ளப் படக்கூடாது.)

- பதிவு செய்யப்படாத வாடகை உறுதிப் பத்திரம் - 02 புள்ளிகள் (உச்சப் புள்ளிகள் 10)

III. வதிவினை உறுதி செய்வதற்கான மேலதிக ஆவணங்கள்
ஒரு ஆவணத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள் (உச்சப்புள்ளிகள் 05)
(தேசிய அடையாள அட்டை / மின்சாரப் பற்றுச் சீட்டு / நீர்ப் பற்றுச் சீட்டு / தொலைபேசி பற்றுச் சீட்டு / விவாகப் பதிவுச் சான்றிதழ் போன்றன)

IV. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத்தூரம்

வதிவு உறுதிப்படுத்தப்படின் மாத்திரம் தற்போதைய வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படுதல் வேண்டும்.

(உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான ஊடகத்தைக் கொண்டதுமான தமக்கு உரிய பெண்கள் / ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரசாங்கப் பாடசாலைகளாகும்). ஏதாவது பாடசாலையொன்று வசிப்பிடத்திற்கு அண்மையில் இருப்பினும் அப்பாடசாலைக்குச் செல்ல மார்க்கம் அற்றிருப்பின் (உ-ம் ஆறுகள் போன்றன) அப்பாடசாலைக்காக புள்ளிகள் குறைக்கப்படக்கூடாது (உச்சப் புள்ளிகள் 50)

இவ் வகையின் கீழ் வதிவு உறுதிப்படுத்தப்படாவிடின் வழங்கப்பட்ட புள்ளிகளை நீக்க முடியும்.



3 - CM 014605

**6.2 குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் - 25%**

இவ் வகையின் கீழ் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பழைய மாணவர் / மாணவியரான, பிள்ளையின் தாய் / தந்தை / சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (I) | விண்ணப்பதாரி பாடசாலையில் கல்வி கற்ற வகுப்பொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் | (உச்சப் புள்ளிகள் 26) |
| (II) | பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி பெற்றுக் கொண்ட கல்வி சார் வெற்றிகள். | (உச்சப் புள்ளிகள் 25) |
| (III) | பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள். | (உச்சப் புள்ளிகள் 25) |
| (IV) | பழைய மாணவர் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்வி சார் வெற்றிகள், பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகள். | (உச்சப் புள்ளிகள் 24) |

(இங்கு பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 6 புள்ளிகளே வழங்குதல் வேண்டும். )

குறிப்பு : ii, iii, iv இல் குறிப்பிடப்படும் உச்ச புள்ளிகளை நேர்முகப்பரீட்சைக் குழுவின் தற்றுணிவுக்கேற்ப சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு பாதகம் ஏற்படாதவாறு சிறு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள முடியும். இது தொடர்பாக நேர் முகப்பரீட்சைக் குழுவின் தலைவர் மூலம் பாடசாலைச் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் குறிப்பு இடப்பட வேண்டியதோடு தமது அறிக்கைப் புத்தகத்திலும் அறிக்கைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**6.3 தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர, சகோதரிகள் - 15%**

இவ் வகையின் கீழ் பிள்ளையின் பெற்றோரின் / சட்டரீதியான பாதுகாவலரின் மூத்த பிள்ளைகள் தற்போது அப்பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின் விண்ணப்பிக்க முடியும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

I. பாடசாலையில் உள்ள சகோதர சகோதரிகள்:

இதற்காக புள்ளி வழங்குகையில் பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர / சகோதரிகளின் எண்ணிக்கை எவ்வளவாயினும் அதில் ஒருவருக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு புள்ளிகள் வழங்குகையில் சகோதர / சகோதரி பாடசாலையில் படித்த ஒரு தரத்திற்கு 03 புள்ளிகள் வீதம். (உச்சப் புள்ளிகள் 30)

II. வதிவு :

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல.06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

- வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியினதும், விண்ணப்பதாரியின் துணையினதும் பெயர்கள் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் பதிவுசெய்யப்பட்டிருப்பின் விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்காக வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்.

(கடந்த வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்து, விண்ணப்பதாரி /துணை வெளிநாடொன்றிற்குச் சென்றிருப்பின் அல்லது இறந்திருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்துப் பெற்றிருப்பின் ஆவணங்களைக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்)

- வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் அல்லது துணையின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பின் விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்காக வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் 10 புள்ளிகள். (உச்சப் புள்ளிகள் 15)

**கவனிக்கவும்:** தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு போசணைப் பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும் போது, கீழ்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலையைவிட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகளுக்காகக் குறைக்கப்படும் புள்ளிகள் மாற்றம் பெறாதிருந்தால் மட்டும் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதைய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

III. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம் :-

தற்போதைய வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படுதல் வேண்டும்.
(உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான ஊடகத்தைக் கொண்டதுமான, தமக்கு உரிய பெண்கள் / ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரசாங்கப் பாடசாலைகளாகும்) (உச்சப் புள்ளிகள் 35)
ஏதாவது பாடசாலையொன்று வசிப்பிடத்திற்கு அண்மையில் இருப்பினும் அப்பாடசாலைக்கு செல்ல மார்க்கமற்றிருப்பின் (உ-ம் ஆறுகள் போன்றன) அப்பாடசாலைக்காக புள்ளிகள் குறைக்கப்படக்கூடாது.

IV. வதிவினை உறுதிப்படுத்தும் ஆவணம்

உரிய நபருக்கு வதிவினை உறுதிப்படுத்தும் ஆவணம் சொந்தமாக்கப்பட்டு 05 வருடங்கள் அல்லது அதனை விடக் கூடிய காலம் சென்றிருப்பின் முழுமையான புள்ளிகளையும் 05 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையேயான காலத்தினைக் கொண்டிருப்பின் முழுமையான புள்ளிகளில் 75% ஐயும் மூன்று வருடத்தினை விடக் குறைவான காலத்தினைக் கொண்டிருப்பின் முழுப் புள்ளிகளின் 50% ஐயும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

- வதிவிடத்தின் உரித்து உறுதி
  விண்ணப்பதாரியின் / துணையின் பெயரில் உரித்து உறுதி இருப்பின் - 10 புள்ளிகள்
  விண்ணப்பதாரியின் / துணையின் தாயின் அல்லது தந்தையின் பெயரில் உரித்து உறுதி இருப்பின் - 06 புள்ளிகள்
  (ஏனையோரின் பெயரில் இருந்தால் இப்புள்ளிகள் வழங்கப்படக் கூடாது.விகாரைகளைச் சார்ந்த இடங்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் ஆவணங்கள் போன்றன பிரதேசத்திற்கு ஏற்ப ஏற்றுக்கொள்ள முடியும். மேலும் உறுதியின் வரலாற்றினை இரண்டாம் பிரதியையும் பரீட்சித்து அத்தாட்சிப் படுத்திக் கொள்ள முடியும்).

**கவனிக்கவும்:** விண்ணப்பதாரியின் பெற்றோரின் பெயரில் வசிப்பிடத்திற்கான உரிமை இருந்து, பின்பு விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரிமை பெறப்பட்டதன் பின் முடிவடைந்த காலம் மூன்று வருடங்களைவிடக் குறைவாக இருப்பின் பெற்றோரின் பெயரிலேயே உரித்துறுதி இருப்பதைப்போன்று கருதி முழுமையாக வசித்த காலம் 05 வருடங்களைவிட அதிகமாயின் மட்டும் 06 புள்ளிகள் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

- பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப் பத்திரம் / அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் அல்லது சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய உரிமையை உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள் - 04 புள்ளிகள்
  (பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போரை இதில் சேர்த்துக் கொள்ளக் கூடாது)

- பதிவு செய்யப்படாத வாடகை உறுதிப் பத்திரம்- 02 புள்ளிகள்

(உச்சப் புள்ளிகள் 10)

V. பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர / சகோதரிகள் பாடசாலைக்கு பெற்றுத் தந்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலையில் அனுமதி பெற எதிர்பார்க்கும் பிள்ளையின் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும்.
(பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 4 புள்ளிகளே வழங்கப்படுதல் வேண்டும்.) (உச்சப் புள்ளிகள் 10)

## 6.4 கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் - 05%

கல்வியமைச்சின் கீழ் பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களாக தாய் / தந்தை / சட்ட ரீதியான பாதுகாவலர் இருப்பின் மாத்திரமே அவ்வகைக்கு விண்ணப்பிக்க முடியும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.(தாய், தந்தை இருவரும் இவ் வகையின் கீழ் தகைமை பெறின் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவரின் புள்ளிகளை மாத்திரம் கருத்திற்கொள்ளல் வேண்டும்)

I. கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித்தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் நிரந்தரப் பணியாளராக சேவையாற்றிய காலம் - முழு வருடமொன்றுக்கு 01 புள்ளி வீதம் (உச்சப் புள்ளிகள் 20)

II. தற்போதைய நிரந்தர வதிவிடத்திலிருந்து தற்போதைய சேவை நிலையத்துக்குள்ள தூரம்

100 k.m ஐ விட அதிகமெனில் - 35 புள்ளிகள்
99 k.m தொடக்கம் 50 k.m வரை - 25 புள்ளிகள்
49 k.m தொடக்கம் 25 k.m வரை - 15 புள்ளிகள்
25 k.m ஐ விட குறைவாயின் - 05 புள்ளிகள்

இப் புள்ளிகள் நிரந்தர வதிவிடத்திற்குரிய போசணைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலையொன்றுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். (இங்கு வதிவு உறுதி செய்து கொள்ளப்படல் வேண்டும்.) (உச்சப் புள்ளிகள் 35)

III. கஷ்டப் பாடசாலைச் சேவைக் காலம்

(கஷ்டப் பாடசாலை என்பதை உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்)

* தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் கஷ்டப் பாடசாலைக் காலம் - பூரண 01 வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள்

* தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றாத எனினும் இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றியிருப்பின் சேவைக் காலம் - பூரண 01 வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள். (உச்சப் புள்ளிகள் 25)

**கவனிக்கவும்** : குறைந்த பட்சம் ஒரு வருடத்தைவிட அதிக கஷ்டப் பாடசாலைக் காலம் உள்ளவர்களுக்கு மாத்திரம் பூரண வருடத்தைவிட மேலதிகமான ஆறு மாதங்கள் அல்லது அதைவிடக் கூடிய மாதங்களுக்கு உரிய புள்ளியில் பாதியைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

IV. பெற்றுக்கொள்ளாத விடுமுறைகள்:

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம்.
(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக்குறைவாயின் புள்ளிகள் பெற்றுக் கொடுத்தல் கூடாது. இங்கு பிரசவ விடுமுறையின் பின் பெற்றுக்கொள்ளப்படும் அரைச்சம்பள, சம்பளமற்ற விடுமுறைகள் போன்றன உரிய நபருக்குரிய பொது விடுமுறை நாட்களில் (அமைய ,வைத்திய அல்லது ஓய்வு) இருந்து குறைக்கப்படல் வேண்டும். (உச்சப் புள்ளிகள் 10)

V. பிள்ளையை அனுமதிக்க விரும்பும் பாடசாலையிலேயே சேவையாற்றின்,

- சேவைக்காலம் 03 வருடங்கள் அல்லது அதைவிடக் கூடுதலாயின் 10 புள்ளிகள்.
- சேவைக் காலம் 03 வருடங்களை விடக் குறைவாயின் 05 புள்ளிகள் (உச்சப் புள்ளிகள் 10)

**6.5 அரச தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்ற அரச /கூட்டுத்தாபன /நியதிச்ச சட்ட சபை /அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் - 04%**

இவ் வகைகளின் கீழ் அரச / கூட்டுத்தாபன / நியதிச் சட்ட சபை / அரசாங்க வங்கி அலுவலர் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் அன்றி அரசாங்க / நிறுவனத்தின் தேவைக்கேற்ப விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருடங்களினுள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தினுள் அமைந்த நிறுவனமொன்றுக்கு இடமாற்றம் பெற்று பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தினுள் பிள்ளையுடன் விண்ணப்பதாரி வசித்தால் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

I. முன்னைய சேவை நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்று வந்த புதிய சேவை நிலையத்துக்கும் இடையிலான தூரம்

100 km ஐ விட அதிகமெனில் - 40 புள்ளிகள்
99 km தொடக்கம் 50 k.m வரை - 30 புள்ளிகள்
49 km தொடக்கம் 25 km வரை - 20 புள்ளிகள்
25 km ஐ விட குறைவாயின் - 10 புள்ளிகள் (உச்சப் புள்ளிகள் 40)

II. இடமாற்றம் பெற்று வந்து வசிக்கும் வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம் (வதிவு உறுதிசெய்து கொள்ளப்படல் வேண்டும்)

தற்போது வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகளினைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படுதல் வேண்டும்.

(உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான ஊடகத்தைக் கொண்டதுமான, தமக்கு உரிய பெண்கள் / ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரசாங்கப் பாடசாலைகளாகும்.) (உச்சப் புள்ளிகள் 35)

ஏதாவது பாடசாலை ஒன்று வசிப்பிடத்திற்கு அண்மையில் இருப்பினும் அப்பாடசாலைக்குச்செல்ல மார்க்கமற்றிருப்பின்( உ-ம் ஆறுகள் போன்றன) அப்பாடசாலைக்காக புள்ளிகள் குறைக்கப்படக்கூடாது.

III. அரச / கூட்டுத்தாபன / நியதிச்சட்ட சபை / அரச வங்கி அலுவலராக சேவைக்காலம் வருடத்துக்கு 01 புள்ளி வீதம் (உச்சப் புள்ளிகள் 10)

IV. இடமாற்றம் பெற்று முடிவடைந்த காலம் முதல் – (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் தொடக்கம்

| | |
|---|---|
| வருடமொன்றிக்குள் | - 05 புள்ளிகள் |
| 01 வருடம் - 02 வருடத்தினுள் | - 04 புள்ளிகள் |
| 02 வருடம் - 03 வருடத்தினுள் | - 03 புள்ளிகள் |
| 03 வருடம் - 04 வருடத்தினுள் | - 02 புள்ளிகள் |
| 04 வருடம்- 05 வருடத்தினுள் | - 01 புள்ளி |

(உச்சப் புள்ளிகள் 05)

V. பெற்றுக் கொள்ளாத விடுமுறைகள்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம் (உச்சப் புள்ளிகள் 10)

(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக்குறைவாயின் புள்ளிகள் பெற்றுக் கொடுத்தல் கூடாது. இங்கு பிரசவ விடுமுறையின் பின் பெற்றுக்கொள்ளப்படும் அரைச்சம்பள, சம்பளமற்ற விடுமுறைகள் போன்றன உரிய நபரொருவருக்குரிய விடுமுறை நாட்களில் (அமைய, வைத்திய அல்லது ஓய்வு) இருந்து குறைக்கப்படல் வேண்டும்).

**கவனிக்கவும்:** முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தின் பின் அல்லது முதலாம் தரம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அரசின் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்று / உரிய பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்து விட்டு வரும் அலுவலர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உரிய பாடசாலை அடங்கும் மாகாணக் கல்வி திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பப் படிவங்களை அவர்கள் அனுப்புதல் வேண்டும். இப் பெற்றோரின் பிள்ளைகளுக்காக உரிய கல்வி அதிகாரிகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட பாடசாலையொன்று பெற்றுத் தரப்படும். இவர்களுக்காகவும் மேலே குறிப்பிட்ட புள்ளி வழங்கும் முறையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 6.6 பிள்ளையுடன் வெளிநாட்டில் இருந்துவிட்டு வந்தவர்களின் பிள்ளைகள் - 01%

இவ் வகையின் கீழ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்திற்கு முந்தைய வருடத்தின் ஜுலை 01ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் வரையான காலத்தினுள் பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்து விட்டு வந்துள்ள தாய் / தந்தை / சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும். கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப இவ்வகையின் கீழ் தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

I. நாடு திரும்பிய தினத்திலிருந்து அதற்கு முன் வெளிநாட்டில் இருந்த காலம்.

தொடர்ந்து 03 வருடங்கள் அல்லது அதைவிடக் கூடிய காலம் - 25 புள்ளிகள்
தொடர்ந்து 02 வருடங்கள் தொடக்கம் 03 வருடங்கள் வரையான காலம் - 15 புள்ளிகள்
தொடர்ந்து 01 வருடம் தொடக்கம் 02 வருடங்கள் வரையான காலம் - 10 புள்ளிகள் (உச்சப் புள்ளிகள் 25)

II. வெளிநாடு சென்றமைக்கான காரணம்:

இலங்கை அரசின் தூதுவராலயக் கடமையின் காரணமாக - 40 புள்ளிகள்
இலங்கை அரசின் தேவையொன்றுக்காக (அரசின் மூலம் அல்லது அரசிற்காக வெளிநாடொன்றில் கடமையொன்றினை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவருக்காக) - 30 புள்ளிகள்
புலமைப் பரிசிலொன்றைப் பெற்று - 20 புள்ளிகள்
சொந்த தேவையொன்றுக்காக - 10 புள்ளிகள் (உச்சப் புள்ளிகள் 40)

III. தற்போதைய வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம் (வதிவு உறுதிப்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்)

வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படுதல் வேண்டும். (உச்சப் புள்ளிகள் 35)

(உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான ஊடகத்தைக் கொண்டதுமான தமக்கு உரிய பெண்கள் / ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரசாங்கப் பாடசாலைகளாகும்)

ஏதாவது பாடசாலை ஒன்று வசிப்பிடத்திற்கு அண்மையில் இருப்பினும் அப்பாடசாலைக்குச் செல்ல மார்க்கமற்றிருப்பினும் (உ-ம் ஆறுகள் போன்றன) அப்பாடசாலைகளுக்காக புள்ளிகள் குறைக்கப்படக்கூடாது.

**7.0 விண்ணப்பங்கள் கிடைத்தபின் எடுக்கும் நடவடிக்கைகள் :**

7.1 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின் சகல விண்ணப்பங்களும் அதிபரின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் விளக்கமாக மேலேயுள்ள 6.1 இலிருந்து 6.6 வரையான வகைகளுக்கேற்ப வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

7.2 இங்கு கிடைத்த விண்ணப்பங்கள் இலக்கமிடப்பட்டு சீ.ஆர். புத்தகமொன்றில் அந்தந்த வகைக்கு வேறாக்கப்பட்ட பக்கங்களில் தொடர் இலக்கத்துடன் அட்டவணைப்படுத்தப்படல் வேண்டும். இதற்காகப் புத்தகத்தில் இணைந்துள்ள இரண்டு பக்கங்களை தொடர்புபடுமாறு ஆக்கிக் கொள்வதோடு கீழே காணப்படும் மாதிரிப் படிவத்தை அதற்காகப் பயன்படுத்துதல் வேண்டும். இவ் ஆவணப்படுத்தலை கணினி மூலம் செய்து கொள்வதாயின் அடிப்படை தகவல்கள் மாத்திரம் கணினிப்படுத்தப்பட வேண்டியதோடு ஏனைய தகவல்கள் அதாவது பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் விசேட குறிப்பு கணினி அச்சுப் பிரதியில் கையால் எழுதப்படுதல் வேண்டும்.

7.3 வகை...............................

| தொ.இல | பிள்ளையின் பெயர் | பிறந்த திகதி | பால் (ஆண் / பெண்) | தாய் / தந்தை பாதுகாவலர் / பெயர் | முகவரி | பெற்றுக் கொண்ட புள்ளிகள் | விசேட குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

7.3 யுத்த நடவடிக்கைக் கடமைகளில் ஈடுபடும் / ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் உறுப்பினர்களின் பிள்ளைகள் மேலே 6.0 (அ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளின் கீழ் அவர்களுக்கு உரிய தகைமைகள் இருப்பின் யுத்த நடவடிக்கைகளுக்காக வழங்கும் விசேட சலுகை பற்றிக் கவனத்திற் கொள்ளாது செயற்படுதல் வேண்டும்.

7.4 அனைத்து வகைகளுக்கும் புள்ளியிடும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையால் நேர்முகப் பரீட்சைக் குழு மூலம் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக, சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களிலுள்ள விபரங்களை குறித்துக் கொள்வதற்கும், புள்ளிகளை வழங்குவதற்கு புள்ளியிடும் முறைமைக்கு ஏற்ப புள்ளியிடும் படிவங்களைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும்.

8.0 **தெரிவு செய்வதற்கான ஆரம்ப நேர்முகப் பரீட்சை**

8.1 **நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்தல்.**

அ. நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட முன்னர் பாடசாலையின் சமய விகிதாசாரத்திற்கு ஏற்ப (இருந்தால் மாத்திரம்) 3.2 இன் படி வெற்றிட எண்ணிக்கை பிரித்துக்கொள்ளப்பட்டதன் பின் ஒவ்வொரு வகையின் கீழும் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்கள் சமயத்துக்கு ஏற்ப பிரித்துக் கொள்ளப்படல் வேண்டும். (வகைகளின்படி நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகையிலும் சமயத்திற்கு ஏற்ப வெவ்வேறாக அழைத்துப் பரீட்சிக்கப்பட வேண்டியதோடு பிள்ளைகளின் தெரிவு செய்யப்பட்ட அட்டவணைகளை வெளியிடும் போதும் ஒவ்வொரு வகைகளின் கீழ் ஒவ்வொரு சமயத்துக்கும் உரிய பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிள்ளைகளின் பெயரட்டவணை வெவ்வேறாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஆ. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று அட்டவணைப்படுத்தப்பட்டதன் பின் நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் விண்ணப்பப்படிவங்களிலுள்ள தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு விண்ணப்பங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். பின்பு அவ்வாறு வழங்கப்பட்ட புள்ளிகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயார் செய்யப்பட்டு பட்டியலில் மேலே உள்ள நேர்முகப் பரீட்சையின் மூலம் அனுமதிக்கக் கூடிய எண்ணிக்கையை போன்று 04 மடங்கு எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்காக தெரிவு செய்து அட்டவணைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். வெற்றிட எண்ணிக்கையைப் போன்று 04 மடங்கை விட குறைவாக விண்ணப்பங்கள் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பித்த அனைவரும் நேர்முகப்பரீட்சைக்காக தகைமை பெறுவர்.

இ. நேர்முகப் பரீட்சைக் குழுவுடன் கலந்துரையாடி திகதிகள் தீர்மானிக்கப்பட்டதன் பின் அதிபர் மூலம் குறித்த பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படல் வேண்டும். அழைப்புக்கடிதம், பாடசாலை அதிபரின் கையொப்பம், பதவி முத்திரை என்பவற்றுடன் இரண்டு வாரங்களுக்கு முன்பாவது குறித்த தாய் / தந்தை / சட்ட ரீதியான பாதுகாவலருக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அத்தோடு நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விபரங்கள் நேரகாலத்தோடு பாடசாலையில் காலைக்கூட்டத்தில் அறிவிக்கப்படுவதுடன் அறிவித்தல் பலகையில் காட்சிப் படுத்துவதைக் கொண்டும் பகிரங்கப்படுத்துதல் வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சைக் குழு மூலம் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டதன் பின் விண்ணப்பதாரிகள் புள்ளி முன்னுரிமைப்படி தயார் செய்யப்படும் வெற்றிட எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்கினைக் கொண்டஅட்டவணையில் அடங்காவிடின் அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்காதிருத்தல் வேண்டும். எனினும் இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன் பாடசாலை அதிபரால் விண்ணப்பதாரிகளுக்கு கடிதம் மூலம் அறியச் செய்யப்படல் வேண்டும்.

8.2 அ. நேர்முகப் பரீட்சையின் போது இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்பநேர்முகப் பரீட்சைக்குழுவின் மூலம் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள புள்ளிகள் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும். இங்கு 7.4 இன்படி தயார் செய்யப்பட்ட புள்ளியிடும் படிவங்களில் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் முன்னிலையிலேயே புள்ளிகள் வழங்கப்பட்டு அப்படிவத்தில் வழங்கப்பட்ட புள்ளிகளுக்கு இணக்கம் தெரிவிப்பதாகவும் பிழையான தகவல்கள், போலியான ஆவணங்கள் வழங்கப்பட்டிருப்பதாக நிருபணமாயின் புள்ளிகள் மாற்றியமைக்கப்பட/ நீக்கப்பட இடமுண்டு என்பதை தான் அறிந்திருப்பதாகவும் அவர்களிடம் ஒப்பங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் பல வகைகளுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்த அனைத்து வகைகளுக்கும் தகைமைகள் பரீட்சிக்கப்படல் வேண்டும்.

ஆ. பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் வாக்காளர் இடாப்புக்களின் பதிவு விபரங்களை கோட்டக் கல்வி காரியாலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களின் மூலம் அல்லது தேர்தல்

திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் இறுவட்டுக்கள் (CD) மூலம் நேர்முகப் பரீட்சைக் குழு உறுதிப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இ. வாக்காளர் இடாப்புக்களில் பதிவு விபரங்கள் தொடர்பில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தேர்தல் திணைக்களத்தின் மூலம் அதனை உறுதிப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஈ. இங்கு தாய் / தந்தை/ சட்ட ரீதியான பாதுகாவலர் மூலம் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியையும் சமர்பிக்கப்பட்டுள்ள தகவல்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களினதும் மூலப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக இவ் ஆவணங்களின் ஒரு பிரதியையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

உ. தாய்/தந்தை/சட்டரீதியான பாதுகாவலர் மூலம் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் உண்மைத் தன்மையை சத்தியக் கடதாசி ஒன்றினைப் பெற்று உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஊ. எனினும் சமர்ப்பிக்கப்பட்ட ஏதும் ஆவணம் போலியானதென நேர்முகப் பரீட்சைக்குழு கருதினால் அதை வழங்கிய நிறுவனத்திடம் அல்லது அதிகாரம் பெற்றவரிடம் விசாரித்து அது பற்றிய உண்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நேர்முகப் பரீட்சைக்குழுவின் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பமொன்று ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அது பற்றிய உரிய அதிகாரம் பெற்றவருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்க முடியும். அதன் பிரகாரம் சமர்ப்பித்துள்ள ஆவணம் / ஆவணங்கள் பிழையானவை என உறுதிப்படுத்தப்படுமாயின் அவ்வாறான ஆவணம் / ஆவணங்கள் சமர்ப்பித்தமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

8.3 அ. ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் பின் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கேற்ப நேர்முகப்பரீட்சைக் குழு மூலம் ஒவ்வொரு வகைகளுக்கும் வெவ்வேறாக புள்ளி முன்னுரிமைப்பட்டியல் தயார் செய்யப்படல் வேண்டும். இப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக்கு அனுமதிப்பதற்காக புள்ளி முன்னுரிமைப்படி தற்காலிகமாக தெரிவு செய்து கொள்ளக் கூடிய பிள்ளைகளின் தற்காலிக அட்டவணையொன்றை தயார் செய்து கொள்ளல் வேண்டும். இங்கு சமாந்தர வகுப்பொன்றிக்காக தெரிவு செய்து கொள்ளக் கூடிய ஆகக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை 33 ஆகும். தற்காலிக அட்டவணைக்கு மேலதிகமாக புள்ளி முன்னுரிமைக்கேற்ப ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக வெற்றிட எண்ணிக்கையைப் போல் 25% கொண்ட காத்திருக்கும் அட்டவணையையும் தயார் செய்யப்படல் வேண்டும்.

ஆ. தற்காலிக அட்டவணை கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயார் செய்யப்படல் வேண்டும். தற்காலிக அட்டவணையை தயார் செய்கையில் பாடசாலையின் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப புள்ளி முன்னுரிமைப்படி ஒவ்வொரு வகையையும் வெவ்வேறாக குறிப்பிடல் வேண்டும். இவ்வாறே காத்திருக்கும் அட்டவணையும் தயார் செய்யப்படல் வேண்டும்.

வகை: ..................................

வெற்றிட எண்ணிக்கை:-..............................

| தொடர் இலக்கம் | பிள்ளையின் பெயர் | தாய்/தந்தை/சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் | முகவரி | பெற்றுக் கொண்ட புள்ளிகள் | விசேட குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

நேர் முகப்பரீட்சைக் குழு உறுப்பினர்கள்

பெயர் கையொப்பம்

1.
2.
3.
4.
5

இ. தற்காலிக அட்டவணையையும் காத்திருக்கும் அட்டவணையையும் வெளியிடுவதற்கு முன் பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் வகையின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணைகளில் பெயருள்ள பிள்ளைகளின் வதிவினை வதிவிடத்துக்குச் சென்று பரீட்சிப்பதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். வதிவிடத்துக்குச் சென்று பரீட்சிக்கும் போது வதிவு உறுதி செய்யப்படாவிடின் அட்டவணையிலிருந்து பெயர் நீக்கப்பட்டு மேன்முறையீடு எதிர்ப்புப் பரிசீலனைக்கு அழைத்தல் வேண்டும். தேவையேற்படின் ஏனைய வகைகளுக்காகவும் வசிப்பிடம் சென்று பரீட்சிக்க முடியும். (யாராவதொரு நபரின் வதிவினை/ வதிக்காதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு பிற்காலத்தில் அவசியமேற்படின் அதனை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் வதிவிடப் பரிசீலனை தொடர்பான அனைத்து தகவல்களுமடங்கிய அறிக்கைகளை தயார் செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ஈ. ஒன்றுக்கதிகமான வகைகளுக்கு விண்ணப்பித்த பிள்ளையொன்று சில வகைகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அப்பிள்ளையின் பெயரை அதிக விகிதாசாரம் கொண்ட வகையில் மாத்திரம் மீதப்படுத்தி ஏனைய வகைகளின் அட்டவணைகளிலிருந்து நீக்குதல் வேண்டும்.

உ. மேற்கூறப்பட்டவாறு தயார் செய்யப்பட்ட தற்காலிக அட்டவணையினதும் காத்திருக்கும் அட்டவணையினதும் நான்கு பிரதிகள் தயார் செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக் குழுவின் சகல உறுப்பினர்களும் சகல பக்கங்களிலும் ஒப்பமிட்டு அதிபரிடம் கையளித்தல் வேண்டும். பின்பு அதிபர் மூலம் தேசிய பாடசாலையாயின் தேசியப் பாடசாலைகள் இணைப்புக் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒவ்வொரு பிரதிகள் வீதமும் மாகாணப் பாடசாலையாயின் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒவ்வொரு பிரதிகள் வீதமும் அனுப்பி வைத்தல் வேண்டும். மூன்றாவது பிரதி பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிக்கு விடப்படல் வேண்டும். நான்காவது பிரதி பாடசாலையில் கோவைப்படுத்தப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மாகாணப்பாடசாலையாயின் மேலும் ஒருபிரதி பெறப்பட்டு மாகாணக்கல்விச் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஊ. அறிவித்தல் பலகையில் காட்சிக்கு விடப்படும் தற்காலிக அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் இரண்டு வாரங்களாவது தொடர்ந்து காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும். தற்காலிக அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் உரிய நேர்முகப் பரீட்சைக் குழுவின் ஒப்பமின்றி வெளியிடப்படக் கூடாது.

## 9.0 மேன்முறையீடு, எதிர்ப்பைத் தெரிவித்தல்.

9.1 காட்சிக்கு விடப்பட்ட தற்காலிக அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிக்கு விடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள், அட்டவணைகளில் ஏதாவது ஓரிடத்தில் தகைமையற்ற பிள்ளையொன்றின் பெயர் அடங்கியிருப்பின் அது பற்றிய எதிர்ப்பையும் தகைமையிருந்தும் தமது பிள்ளையின் பெயர் தகைமையற்ற ஓரிடத்தில் இருப்பின் அது பற்றிய மேன்முறையீட்டினையும் அல்லது இதில் ஏதாவது ஒன்றினை அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தோடு தமது முகவரியுடன் கூடிய பதிவுத் தபாலுக்கான முத்திரைகள் ஒட்டிய கடித உறை ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். இக்கால எல்லையின் பின் சமர்ப்பிக்கப்படும் எவ்வித எதிர்ப்புகளும் மேன்முறையீடுகளும் கருத்திற் கொள்ளப்பட கூடாது.

9.2 (அ) அதிபரின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் சகல எதிர்ப்புக் கடிதங்களும் வெவ்வேறாக இலக்கமிடப்பட்டு கீழ்க் காட்டப்படும் மாதிரிக்கேற்ப அட்டவணைப்படுத்துமாறு ஆரம்ப நேர்முகப் பரீட்சைக் குழுவில் அங்கத்துவம் பெறாத பாடசாலையின் பிரதி அதிபரொருவருக்கு பொறுப்பளிக்கப்பட வேண்டும். அநாமதேயமாக வரும் எதிர்ப்புக் கடிதங்களும் இவ்வட்டவணைக்குட்படுத்தப்படல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | எதிர்ப்புக்கு உள்ளான பிள்ளையின் பெயர் | அப்பிள்ளையின் அழைப்பு இலக்கம் | அப்பிள்ளையின் தாய் /தந்தை பாதுகாவலரின் பெயரும் முகவரியும் | கடித இலக்கம் | செய்யப்பட்ட எதிர்ப்பு சுருக்கமாக |
|---|---|---|---|---|---|
| | | | | | |

இவ்வட்டவணை இரகசியமாக பேணப்படல் வேண்டும்.

(ஆ) இதற்கு மேலதிகமாக மேன்முறையீட்டினை சமர்ப்பித்தோரின் அட்டவணையொன்றும் மேலே 9.2 (அ) வில் குறிப்பிடப்பட்ட பிரதி அதிபர் மூலம் பொருத்தமான முறையில் தயார் செய்து கொள்ளப்படல் வேண்டும்.

9.3 (அ) சகல எதிர்ப்புகளும், மேன்முறையீடுகளும் அட்டவணைப் படுத்தப்பட்டு மேன்முறையீடு எதிர்ப்பை தெரிவிக்கும் இரு வார கால எல்லை முடிவடைந்து 10 தினங்களுக்குள் எதிர்ப்புக்குள்ளான பிள்ளைகளின் எண்ணிக்கையையும், மேன்முறையீடு செய்துள்ளோரின் எண்ணிக்கையையும் மாகாணப் பாடசாலையாயின் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், தேசிய பாடசாலையாயின் கல்வியமைச்சின் தேசிய பாடசாலையின் கல்விப்பணிப்பாளருக்கும் மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் அதிபர் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அட்டவணைப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட எதிர்ப்புகளுக்கான அட்டவணைக்கும் மேன்முறையீட்டு அட்டவணைக்கும் ஏற்ப, ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்கு உபயோகித்த அட்டவணையில் (சீ.ஆர்.புத்தகம் / கணணி அச்சுப் பிரதியில்) உரிய பெயரின் கீழ் ஒரு நிறத்தால் கோடிடுவதன் மூலம் அல்லது நிறந்தீட்டுதல் (Highlight) மூலம் எதிர்ப்புக்கு உள்ளாக்கப்படுவதை சுட்டிக் காட்டுவதோடு மேன்முறையீடு செய்தோரின் பெயர் வேறொரு நிறத்தால் கோடிட்டு அல்லது நிறந்தீட்டிச் சுட்டிக் காட்டப்படுதல் வேண்டும்.

## 10.0 மேன்முறையீடுகள் எதிர்ப்புக்களைப் பரீட்சித்தல்

10.1 பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்ற மேன்முறையீடு எதிர்ப்புக்கள் முறையாகப் பரீட்சிக்கப்பட்டு முடிவொன்றை எடுப்பதற்காக மேன்முறையீடு எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுவொன்றை நியமித்துக் கொள்ளுதல் வேண்டும். இக்குழு தேசிய பாடசாலைகளுக்காக கல்வியமைச்சின் தேசிய பாடசாலைகள் இணைப்புக் கல்விப்பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம்

நியமிக்கப்படுவதோடு மாகாணப் பாடசாலைகளுக்காக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

10.2 மேன்முறையீடு எதிர்ப்பினைப் பரீட்சிக்கும் குழுவின் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

அ. பாடசாலை வகைப்படுத்தலுக்கேற்ப சமமான மட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் (தலைவர்)
(இரு பாடசாலைகள் அதிபர்களை அப்பாடசாலைகள் இரண்டிற்கும் மாற்றி நியமித்தல் கூடாது)

ஆ உரிய பாடசாலையின் ஆரம்ப நேர்முகக்குழுவின் செயலாளர் (செயலாளர்)

இ. உரிய பாடசாலையின் ஒரு வருடத்தை விட கூடுதலான சேவைக்காலத்தை உடைய ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்குழுவில் இடம் பெறாத பிரதி/ உதவி அதிபரொருவர்/பகுதித்தலைவர்/சிரேஷ்ட ஆசிரியரொருவர்.

ஈ பாடசாலை மேம்பாட்டு பாடசாலை அபிவிருத்திக்குழு/ பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரொருவர் (அப்பாடசாலையின் பழைய மாணவர்/ஆசிரியராக அல்லாதிருத்தல் வேண்டும்)

உ பழைய மாணவர் சங்க உறுப்பினரொருவர்.

10.3 மேற்குறிப்பிடப்பட்ட மேன்முறையீடு எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழு உறுப்பினர்களிடையே ஆரம்ப நேர்முகப் பரிட்சைக்குழுவின் செயலாளர் தவிர ஏனைய அனைத்து உறுப்பினர்களும் உரிய பாடசாலையின் ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்குழுவில் இடம் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்குழுவின் செயலாளராகச் செயற்பட்ட நபரே எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுவினதும் செயலாளராகச் செயற்படுதல் வேண்டும்.

10.4 இதற்கு மேலதிகமாக 10.1இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமனம் வழங்கும் அதிகாரி மூலம் இம் மேன்முறையீடு எதிர்ப்பினைப் பரீட்சிக்கும் செயற்பாட்டை கண்காணிப்பதற்காக கல்வியமைச்சின் அல்லது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரை நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்.

10.5 கண்காணிக்கும் அலுவலர் மேன்முறையீடு எதிர்ப்பை பரீட்சிக்கும் குழுவுடன் தொடர்பு அற்றிருப்பதுடன் இச்செயற்பாட்டைக் கண்காணித்து உரிய ஆலோசனையை வழங்குவார். மேலும் மேன்முறையீடு எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுவுக்குத் தேவை ஏற்படின் இக்கண்காணிப்பாளரின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

10.6 எதிர்ப்பை பரீட்சிக்கையில் எதிர்ப்புக்குள்ளான பிள்ளையின் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மாத்திரம் (ஆரம்ப நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்த) மீண்டும் ஒரு முறை பரிசீலிக்கப்படுவதோடு எதிர்ப்பைத் தெரிவித்தவர்களை அழைத்து எதிர்ப்பின் நம்பகத் தன்மை அறியப்படல் வேண்டும். இதன் பின் எதிர்ப்புக்குள்ளான பிள்ளைகளின் பெற்றோர் /சட்டரீதியான பாதுகாவலர் அழைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டதன் பின் தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். எதிர்ப்பை தெரிவித்த பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர்களையும், எதிர்ப்பிற்குள்ளான பிள்ளைகளின் பெற்றோர் / சட்டரீதியான /பாதுகாவலர்களையும் வெவ்வேறாக அழைத்தல் வேண்டும். ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் போது பாவித்த சீஆர் புத்தகத்தில் /கணினி அச்சுப் பிரதியில் விசேட குறிப்பு நிரலில் இது பற்றிய விபரங்களையும் தீர்மானத்தையும் சிவப்பு நிறத்தால் குறிப்பு இடுவதோடு எதிர்ப்பு பரீட்சித்தல் பற்றி புறம்பான வேறொரு அறிக்கையையும் வைத்திருத்தல் வேண்டும்.

10.7 மேன்முறையீட்டைப் பரீட்சிக்கையில் மேன்முறையீட்டை சமர்ப்பித்த அனைவரையும் அழைத்து நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பித்த ஆவணங்களை மட்டும் மீண்டும் பரீட்சித்தல் வேண்டும். இங்கு எடுக்கப்படும் முடிவும் விபரங்களும் ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் போது பயன்படுத்திய சீஆர் புத்தகத்தில் /கணணி அச்சுப் பிரதியில் விசேட குறிப்பு நிரலில் சிவப்பு நிறத்தால் விசேட குறிப்பு இடுவதோடு இது தொடர்பான புறம்பான வேறொரு அறிக்கையையும் வைத்திருத்தல் வேண்டும்.

10.8 மேன்முறையீடுகள், எதிர்ப்புக்கள் பரீட்சிக்கப்படும் செயற்பாடுகள் பகிரங்கமாகவும் மறைவின்றியும் நடாத்தப்படுவதோடு குழுவிற்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு (வதிவிடம் சென்று பரீட்சித்தல் உட்பட) அவசியமான சந்தர்ப்பங்களில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

10.9 எந்த நிலையிலும் மேன்முறையீடு, எதிர்ப்பை பரீட்சிப்பதற்காக வரவழைத்தல், ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் என்பன பாடசாலை அதிபரால் செய்யப்படல் வேண்டும்.

## 11.0 இறுதி அட்டவணை

11.1(அ) மேன்முறையீடு, எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு மூலம் மேன்முறையீடுகள், எதிர்ப்புகள் பரீட்சிக்கப் பட்டதன் பின் தகைமைக்கு ஏற்ப தற்காலிக அட்டவணையில் உரிய இடத்தில் மேன்முறையீட்டாளர்கள், எதிர்ப்பிற்குள்ளானோர், எதிர்ப்பை தெரிவித்தோர் அனைவரையும் உட்படுத்தி மீண்டும் திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணையைத் தயார் செய்தல் வேண்டும்.இவ்வாறே காத்திருக்கும் அட்டவணையையும் திருத்துதல் வேண்டும்.

(ஆ) இவ்வாறு தயார் செய்யும் போது மேன்முறையீடு, எதிர்ப்பின் மூலம் தகைமை பெற்று தற்காலிக அட்டவணையில் உரிய இடங்களுக்கு பிள்ளைகள் உட்படுத்தப்படும் போது தற்காலிக அட்டவணையில் கடைசியில் இருந்த பிள்ளைகள் அட்டவணையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு. இவ்வாறான பிள்ளைகளின் பெற்றோர்கள் மீண்டும் மேன்முறையீடு, எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழு மூலம் அழைக்கப்பட்டு அவர்களின் தகைமை பரீட்சிக்கப்பட்டதன் பின் இறுதித் தீர்மானத்துக்கு வருதல் வேண்டும்.

11.2 திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணையில் உள்ள பிள்ளைகளின் புள்ளி முன்னுரிமைக்கேற்ப தேவையான எண்ணிக்கை தெரிவு செய்யப்பட்டு இறுதியட்டவணை தயார் செய்யப்படுதல் வேண்டும். ,இங்கு சமாந்தர வகுப்பொன்றுக்கு மேலதிகமாக இரண்டு பிள்ளைகளைத் தெரிவு செய்து கொள்ள முடியும். அதாவது **இறுதியட்டவணையில் சமாந்தர வகுப்பொன்றிற்காக 35 பிள்ளைகள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.**

11.3 (அ) அறிவித்தல் பலகையில் இறுதி அட்டவணையை காட்சிக்கு விடப்பட முன்பு ஒரே பிள்ளையின் பெயர் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் இருத்தலைத் தடுப்பதற்காக உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் கூட்டமொன்று கூட்டப்படல் வேண்டும் இக் கூட்டத்திற்கு அவ்வாறு நடைபெற்றிருக்கும் என எண்ணும் பாடசாலைகளின் அதிபர்களை அழைத்தல் வேண்டும்.

(ஆ) அக் கூட்டத்தில் அப்பாடசாலைகளின் இறுதி அட்டவணைகள் மூலம் ஒரே பிள்ளையின் பெயர் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளின் அட்டவணைகளில் இருக்கின்றதா என்பது பற்றி பரீட்சித்து அவ்வாறான பிள்ளைகளின் அட்டவணை ஒன்றைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும். பின்பு மாகாணக் கல்விப் பணிப்பாளரும் உரிய பாடசாலைகளின் அதிபர்கள் விண்ணப்பத்தில் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் மூலம் விண்ணப்பித்துள்ள பாடசாலை முன்னுரிமை ஒழுங்கிற்கேற்ப குறைந்த முன்னுரிமை வழங்கியுள்ள பாடசாலைகளிலிருந்து பெயரை நீக்கி கூடிய முன்னுரிமை வழங்கியுள்ள பாடசாலையின் இறுதி அட்டவணையில் மாத்திரம் பெயரை மீதப்படுத்துதல் வேண்டும்.

(இ) தற்காலிக அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருந்த பிள்ளையொன்றின் பெயர் இறுதி அட்டவணை தயார் செய்யப்படும் போது அகற்றப்பட்டு உரிய எண்ணிக்கை குறையுமாயின் உரிய வகையின் காத்திருக்கும் அட்டவணையில் மேலே உள்ள பிள்ளையின் பெயரை இறுதி அட்டவணையின் கடைசியில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

11.4 (அ) ஒவ்வொரு வகைகளுக்கும் வெவ்வேறாக இறுதி அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் 04 பிரதிகளில் தயார் செய்யப்பட்டு மேன்முறையீடு, எதிர்ப்புக்களை பரீட்சிக்கும் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உரிய அட்டவணைகளின் அனைத்துப் பக்கங்களிலும் மேன்முறையீடு எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழு மூலம் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக மாத்திரம் பொறுப்புக் கூறுவதாக குறிப்பொன்றினை எழுதி ஒப்பமிட வேண்டும். பின் உரிய பாடசாலையின் அதிபர் மூலம் இவ்வட்டவணைகள் பொறுப்பேற்கப்பட்டு தேசிய பாடசாலையாயின் தேசிய பாடசாலைகள் இணைப்புக் கல்விப் பணிப்பாளருக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒவ்வொரு பிரதிகள் வீதமும் மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒவ்வொரு பிரதிகள் வீதமும் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதோடு அதன் மூன்றாவது பிரதி பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிக்கு விடப்படுதல் வேண்டும். நான்காவது பிரதியை பாடசாலைக் கோவையில் கோவைப்படுத்தி வைத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மாகாணப்பாடசாலையாயின் மேலும் ஒருபிரதி பெறப்பட்டு மாகாணக் கல்விச் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) அறிவித்தல் பலகையில் இடப்படும் இரு அட்டவணைகளும் (இறுதி அட்டவணையும் திருத்தப்பட்ட காத்திருக்கும் அட்டவணையும்) இரு வாரங்களாவது தொடர்ந்து காட்சிக்குவிடப்படல் வேண்டும். இவ் அட்டவணைகள் மேன்முறையீடு, எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுவின் ஒப்பமின்றி வெளியிடப்படக் கூடாது.

11.5 தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அதிபரின் கையொப்பத்தையும் பதவி இலட்சினையையும் இட்டு எழுத்து மூலம் (பின்னிணைப்பு இல 02 மாதிரிக்கமைய) அறிவித்தல் வேண்டும்.

11.6 தெரிவு செய்யப்படாத பிள்ளைகளுக்கு அவர்களுக்குரிய வகையையும், தெரிவு செய்யப்படாமைக்கான காரணத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு எழுத்து மூலம் அறியச் செய்தல் வேண்டும். பிள்ளைகளைத் தெரிவு செய்யும் போது அவ்வவ் வகைகளுக்கு எல்லையாய் அமைந்த வெட்டுப் புள்ளிகளை கட்டாயமாக இக்கடிதத்தில் குறிப்பிடுதல் வேண்டும். இதற்காக இச் சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு இல:03 இல் உள்ள மாதிரியை உபயோகித்தல் வேண்டும்.

11.7 தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் ஆவணங்களின் நிழற் பிரதிகளைக் கொண்ட கோவைகளை ஒவ்வொரு பிள்ளை தொடர்பாகவும் பாடசாலையில் வைத்திருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படாத பிள்ளைகளின் கோவைகளையும் வேறாக வைத்திருத்தல் வேண்டும்.

11.8 மேன்முறையீடு, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட ஏதாவது ஒரு தற்காலிக தேர்வு பற்றி மேன்முறையீடு, எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு மூலம் வழங்கப்படும் தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும்.

11.9 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் முதலாம் தவணையிலேயே முடிக்கப்படுவதோடு அதன்பின்னர் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது.

11.10 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கும் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படும் பட்சத்தில் அதனை நிவர்த்திப்பதற்கான தீர்மானம் எடுப்பதற்கும் கல்வியமைச்சின் செயலாளருக்கு முழு அதிகாரமுண்டு.

**12.0 யுத்த நடவடிக்கைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள/ ஈடுபட்ட முப்படையினருக்கும் பொலிஸ் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சலுகை**

12.1 யுத்த நடவடிக்கைக் கடமைகளில் ஈடுபடும் / ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் உறுப்பினர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதற்காக பாதுகாப்பமைச்சின் செயலாளருக்கு/ உரிய அலுவலர்களுக்கு விண்ணப்பங்களை அனுப்புவர்.

12.2 பாதுகாப்பமைச்சின் செயலாளர் மூலம் பிள்ளைகளைத் தெரிவு செய்தல் தொடர்பாக உரிய புள்ளி வழங்கும் முறையொன்று தயார் செய்யப்பட்டு கல்வியமைச்சிலிருந்து பெறப்படும் பாடசாலை அட்டவணையிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும். இங்கு சமாந்தர வகுப்பொன்றுக்கு 07 பேர் வீதம் தெரிவு செய்யப்படுவர்.

12.3. ஒவ்வொரு பாடசாலைக்கும் யுத்த நடவடிக்கைக்கான விஷேட சலுகை மூலம் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் அட்டவணை பாதுகாப்பமைச்சின் செயலாளர் மூலம் டிசம்பர் 01 ஆம் திகதிக்கு முன் கல்வியமைச்சுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

12.4 பாதுகாப்பமைச்சின் மூலம் பாடசாலைகளுக்கு தெரிவு செய்தனுப்பும் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு முன்பு குறித்த தகைமைகளை பெற்றுள்ளனர் என்பதையும் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் உண்மையானது என்பதையும் அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

12.5 பாதுகாப்பமைச்சுடன் இச் செயற்பாட்டினை தேசிய பாடசாலைகள் இணைப்புக்கல்விப் பணிப்பாளர் ஒருங்கிணைப்புச் செய்வார்.

**13.0** 13.1 இறுதி அட்டவணையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் 35 பேரும் பாதுகாப்பமைச்சின் மூலம் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் முப்படைகளினதும் பொலிஸ் உறுப்பினர்களினதும் தகைமை பெறும் பிள்ளைகள் 07 பேரும் வகுப்பொன்றிற்காக அனுமதித்துக் கொள்ளப்படல் வேண்டும். இதன்படி **முதலாம் தரத்தின் சமாந்தர வகுப்பொன்றிற்கு இறுதியாக தெரிவு செய்து கொள்ளக் கூடிய ஆகக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை 42 ஆகும்.**

13.2 தெரிவு செய்யப்பட்ட இறுதி அட்டவணையில் பெயர் குறிப்பிட்ட பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்ட பின்பும் வெற்றிடங்கள் ஏற்படின் அவ்வெற்றிடங்கள் ஏற்படும் வகைக்கேற்ப திருத்தப்பட்ட காத்திருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒழுங்கின்படி நிரப்புதல் வேண்டும்.

13.3 இதன் பின்பும் வெற்றிடங்கள் இருப்பின் மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் /வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், தேசிய பாடசாலையாயின் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் இணைப்புக் கல்விப் பணிப்பாளருக்கும் அதிபர் அது பற்றி அறிவித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.எவ்வாறாயினும் இப்பிள்ளைகளை அனுமதிக்கும் நடவடிக்கைகள் முதலாம் தவணை முடிவடைவதற்குள் நிறைவுசெய்யப்படுதல்வேண்டும்.

**14.0 தெரிவாகாத பிள்ளைகளுக்கு பாடசாலை பெற்றுக்கொடுத்தல்**

14.1 எந்தப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படாத ஒரு பிள்ளையின் பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் மூலம் தமது பிள்ளைக்கு மாற்றுப் பாடசாலை ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக தாம் வசிக்கும் பிரதேசத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.அதன்படி எந்தப்பாடசாலையும் கிடைக்காத பிள்ளைகளுக்கு பாடசாலையைப் பெற்றுக் கொடுப்பது வலயக்கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

14.2 தெரிவு செய்யப்படாத பிள்ளைகள் பற்றிய அறிக்கையொன்று அதிபர் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் எந்தப் பாடசாலையும் கிடைக்கப் பெறாத பிள்ளைகளுக்கு மாற்றுப் பாடசாலைகள் பெற்றுக் கொடுக்கும் போது இவ்வறிக்கையை பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**15.0** நேர் முகப்பரீட்சைக் குழுக்களினதும் மேன்முறையீடு எதிர்ப்பைப் பரீட்சிக்கும் குழுக்களினதும் உறுப்பினர்களுக்காகவும் இச்செயற்பாடுகளுக்காகவும் ஏதாவது செலவுகள் ஏற்படின் அதற்காக மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க / பாடசாலை மேம்பாட்டு கணக்கிலிருந்து செலவு செய்ய முடியும்.

**16.0 கால அட்டவணை**

16.1 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை தெரிவு செய்யும் செயற்பாடுகள் கட்டாயமாக கீழ்வரும் கால அட்டவணைக்கேற்ப நிறைவு பெறுதல் வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | - ஜூன் 30 |
| நேர்முகப் பரீட்சை நடாத்துதல் | - செப்டெம்பர் 15க்கு முன் |

| | |
|---|---|
| தற்காலிக, அட்டவணையை அறிவித்தல் பலகையில் இடுதல் | - செப்டெம்பர் 30 |
| மேன்முறையீடு, எதிர்ப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி | - ஒக்டோபர் 15 |
| மேன்முறையீடு,எதிர்ப்புக்களை பரிசீலித்தல் | - ஒக்டோபர் 25 – நவம்பர் 20 |
| இறுதி அட்டவணையை வெளியிடுதல் | - டிசம்பர் 01 |
| முதலாம் தர வகுப்புக்களை ஆரம்பித்தல் | - முதலாவது பாடசாலை தவணை ஆரம்பிக்கும் தினம் |

16.2 டிசம்பர் இறுதி இரண்டு வாரங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் அறிமுகம் அடைவதற்காக குழுக்களாக பாடசாலைக்கு வரவழைப்பதோடு ஜனவரி முதல் வாரத்தில் முதலாம் தரத்தின் வகுப்புக்களை முறையாக ஆரம்பித்தல் வேண்டும்.

## 17.0 பொது விடயங்கள்

17.1 பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துதல் பற்றி மாகாணக் கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலையாயின் கல்வி அமைச்சுச் செயலாளருக்கும், மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விச் செயலாளருக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

17.2 பாடசாலைகளில் இருந்து பெற்றோருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பாக பரீட்சிக்கும் பட்சத்தில் அதற்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக அவ்வாறு அனுப்பிய கடிதங்கள் தொடர்பாக விபரமான அறிக்கையொன்றை பாடசாலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

17.3 பயங்கரவாத நடவடிக்கை காரணமாக அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகளைப் பாடசாலையில் அனுமதிக்கும் போது பிறப்புச் சான்றிதழ், போன்றன இல்லாத விடத்து அக்குடும்பம் பயங்கரவாத நடவடிக்கைக்குட்பட்டதென்பதை / இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், அகதி முகாம் சான்றிதழ் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு பொருத்தமான முறையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக் கடதாசியொன்றினைப் பெற்றுக்கொள்வதோடு பின்பு பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

17.4 முறைசார் பாடசாலைகளில் சேராத, எனினும் பாடசாலை செல்லும் வயதையுடைய முறைசாராக் கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் எழுத்தறிவு வகுப்புகளுக்குச் சமுகமளித்து எழுத்தறிவுத் திறமை பெற்ற பிள்ளைகளை அவர்களது வயது, தேர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான வகுப்புகளில் அனுமதிக்க முடியும். எழுத்தறிவு வகுப்புகளுக்கு அல்லது வேறு பாடசாலைகளுக்குச் செல்லாவிட்டாலும் அதிபர் அடங்கிய ஒரு சபையின் மூலம் பிள்ளையின் திறமை பரீட்சிக்கப்பட்டு வெற்றிடங்களுக்கு அமைய அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவிடத்து பிறந்த திகதியை உறுதிப்படுத்திக் கொள்ள சத்தியக் கடதாசியொன்றை பெற்றுக் கொள்ள முடியும்.

17.5 விசேட கல்வித் தேவைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்கு கல்வி அமைச்சின் மூலம் அது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்.

## 18.0 பிள்ளைகளை அனுமதிப்பதற்காகப் பணமும் வேறு உதவிகளும் பெற்றுக் கொள்வதைத் தடை செய்தல் :

சகல அரசினர் பாடசாலைகளுக்கும் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுமதிக்கும் போது வசதிகள், சேவைகள் கட்டணமும் பாடசாலை அபிவிருத்திச சங்க உறுப்பினர் கட்டணமும் தவிர்ந்த வேறு கட்டணங்களோ உதவி நிதிகளோ வேறு பொருட்களோ அறவிடுதல் / பெற்றுக் கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பிள்ளைகளை அனுமதித்ததன் பின்னரும் அவ்வாறான வற்புறுத்தல்கள் செய்தல் கூடாது. இவ்வாறான வற்புறுத்தல்கள் முழுமையாக சட்ட விரோதச் செயலாவதோடு அது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கையும் எடுக்க வேண்டியேற்படும். பாடசாலை அதிபர்களோ அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய வேறு எந்த அமைப்புகளோ அவ்வாறான வற்புறுத்தல்களைச் செய்தல் கூடாது. இங்கு அமைப்புகள் எனப்படுவது பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் உட்படப் பாடசாலையோடு தொடர்புடைய சகல அமைப்புகளும் ஆகும்.

இச்சுற்றுநிருபம் தொடர்பாக எழும் முரண்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்படும் இறுதி முடிவு கல்வி அமைச்சின் செயலாளரின் முடிவாகும்.

இச்சுற்றுநிருபத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எச்.எம்.குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு.

**பிரதிகள் :**

1. தேசிய பாதுகாப்பமைச்சின் செயலாளர்
2. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
3. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. கணக்காய்வாளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள்
8. கல்வி அமைச்சின் சகல பிரிவுத் தலைவர்கள்

பின்னிணைப்பு இல: 01

மாதிரி விண்ணப்பப் படிவம்

**20........ஆம் வருடத்தில் ................................................................. பாடசாலையில் முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவம்**

(பிள்ளையின் பிறப்பு சான்றிதழின் பிரதி ஒன்றினையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்களை சான்றுப் படுத்த தேவையான ஆவணங்களின் பிரதிகளையும் விண்ணப்பதாரியே உறுதிப் படுத்தி இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

01. **விண்ணப்பிக்கும் வகை :**
(ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு தகைமை பெறின் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்)

02. **பிள்ளை பற்றிய விபரம் :**
2.1 முழுப் பெயர் :
(குடும்பப் பெயரின் கீழ்க் கோடிடுக)
2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :
(கடைசியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதுக உ-ம் : S.S. மொஹம்மட்)
2.3 பால் (ஆண் /பெண்) :
2.4 சமயம் :
2.5 போதனா மொழி (சிங்களம் /தமிழ்) :
2.6 பிறந்த திகதி : வருடம் :....... மாதம் :...... திகதி :......
2.7 20... ஜனவரி 31ஆம் திகதியன்று வயது :...... வருடம் ...... மாதம் ..... நாள்

03. **விண்ணப்பதாரியின் விபரங்கள் :** தாய் /தந்தை /சட்டரீதியான பாதுகாவலர் :
3.1 முழுப் பெயர் :
3.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :
3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
3.4 இலங்கையரா? :
3.5 சமயம் :
3.6 நிரந்தர முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
3.7 வசிக்கும் நிர்வாக மாவட்டம் :
3.8 வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :
3.9 வசிக்கும் கிராம சேவை அலுவலர் பிரிவு :................. இலக்கம் :......

04. **விண்ணப்பிக்கும் பாடசாலைகள்** :(இப்பாடசாலையும் உட்பட தமது விருப்பு முன்னுரிமைக்கேற்ப எழுதுதல் வேண்டும்)

| தொடர் இல. | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை (தேசிய/மாகாண) | வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |
| 03. | | | |
| 04. | | | |
| 05. | | | |
| 06. | | | |

(உங்களது பிள்ளை, விண்ணப்பித்த ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் உங்களால் மேலே குறிப்பிடப்பட்ட முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப முன்னுரிமை கூடிய பாடசாலையைப் பெற்றுக் கொடுப்பதோடு தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகளின் பெயர் பட்டியல்களிலிருந்து பெயர் நீக்கப்படும்.)

05. விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட **வதிவிடத்துக்கு** அண்மித்த உரிய பிள்ளையை அனுமதிக்கக்கூடிய வேறு பாடசாலைகள்:

1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.

06. **வாக்காளர் இடாப்பில் பதிவு:**

(வதிவினை உறுதி செய்து கொள்ள வேண்டிய வகைகளுக்கு உரிய பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர், கிராம அலுவலர் காரியாலயத்திலிருந்து விபரங்களைப் பெற்று இப்பகுதியைப் பூரணப்படுத்துவதுடன் அதனை அவரே உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

வாக்கெடுப்பு மாவட்டம் -

கிராமம் /வீதி/ மாவத்தை -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

வாக்கெடுப்பு மாவட்டம் -

கிராமம் /வீதி/ மாவத்தை -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

வாக்கெடுப்பு மாவட்டம் -

கிராமம் /வீதி /மாவத்தை -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

வாக்கெடுப்பு மாவட்டம் -

கிராமம் /வீதி /மாவத்தை -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

வாக்கெடுப்பு மாவட்டம் -

கிராமம் /வீதி /மாவத்தை -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

மேற்கூறப்பட்ட தகவல்கள் வாக்காளர் இடாப்புக்கள் பரீட்சிக்கப்பட்டு என்னால் பிழையின்றி குறிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப் படுத்துகின்றேன்.

...............................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்.

07. கீழ்வரும் பகுதிகளில் தான் விண்ணப்பித்த வகைக்குரிய பகுதியை மாத்திரம் பூரணப்படுத்துக.

| விடயம் | புள்ளிகள் (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) |
|---|---|
| 7.1 **பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள்**<br>(அ) • வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரி, அவரின் துணை என இருவரும் /சட்டரீதியான பாதுகாவலர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள்:- ....................<br>• வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் அல்லது அவரின் துணையின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள் :-.............<br>(விண்ணப்பம் அனுப்பப்படும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது போதுமானதாகும்.)<br>(ஆ) வசிப்பிடத்தின் உரிமை:<br>உரித்து உறுதி (விண்ணப்பதரரின்/துணையின் பெயரில் அல்லது விண்ணப்பதாரியின் பெற்றோரின் பெயரில்) /பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப் பத்திரம் /அரச உத்தியோகபூர்வ விடுதி ஆவணம் / பதிவு செய்யப்படாத வாடகை உறுதிப் பத்திரம் / சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய உரிமையை உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள்)<br>(இ) வதிவினை உறுதி செய்யக்கூடிய மேலதிக ஆவணங்கள்:<br>(ஈ) விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :<br>(கட்டாயமாக இல 06 பூரணப் படுத்தப்படல் வேண்டும்) | |
| 7.2 **பழைய மாணவர்களின் பிள்ளைகள்**<br>(அ) மாணவராகப் பாடசாலையில் கற்ற காலம்:-............இருந்து............வரை வகுப்பு..............இருந்து............ வரை.<br>(ஆ) பாடசாலைக் காலத்தினுள் பெற்றுக்கொண்ட கல்விசார் வெற்றிகள் :-<br>(இ) பாடசாலைக் காலத்தினுள் இணைப் பாட் விதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்:-<br>(ஈ) பழைய மாணவர் சங்க அங்கத்துவம்,பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்விசார் வெற்றிகள் பாடசாலையின் அபிவிருத்திக்காக வழங்கிய பல்வேறுபட்ட உதவிகள் : | |
| 7.3 **தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர -/ சகோதரிகள்**<br>(அ) விண்ணப்பதாரியின் பிள்ளையொன்று /பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின் (see table below) | |

| பிள்ளையின் பெயர் | வகுப்பும் சேர்வு இலக்கமும் | இப்பாடசாலையில் அனுமதி பெற்ற வகுப்பும் கற்ற வகுப்புகள் எண்ணிக்கையும். |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

(ஆ) • வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரி, அவரின் துணை என இருவரும்/ சட்டரீதியான பாதுகாவலர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள்:-..........................

• வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் அல்லது அவரின் துணையின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள்

(விண்ணப்பம் அனுப்பப்படும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது போதுமானதாகும்.)

(இ) விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :

(ஈ) வசிப்பிடத்தின் உரிமை:

உரித்து உறுதி (விண்ணப்பதாரரின்/துணையின் பெயரில் அல்லது

| | |
|---|---|
| செய்யப்பட்ட வாடகை உறுதிப் பத்திரம் /அரச உத்தியோகபூர்வ விடுதி ஆவணம் / பதிவு செய்யப்படாத வாடகை உறுதிப் பத்திரம் / சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய உரிமையை உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள்.<br>(உ) பாடசாலையிலுள்ள சகோதர /சகோதரியர் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் அபிவிருத்திக்காக விண்ணப்பதாரி வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும்<br>(கட்டாயமாக இல 06 பூரணப் படுத்தப்படல் வேண்டும்) | |

| | |
|---|---|
| 7.4 **கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் :**<br>(அ) குறித்த நிறுவனங்களில் நிரந்தரப் பணியாளராக,பதவி, சேவைக்காலம் :<br>(ஆ) வதிவிடத்திலிருந்து சேவை நிலையத்துக்குள்ள தூரம்:<br>(இ) தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் கஷ்டப் பாடசாலை சேவைக் காலம்:<br>(ஈ) இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றியிருப்பின் அச் சேவைக் காலம்:<br>(உ) பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள்:<br>20.... -<br>20.... -<br>20.... -<br>20.... -<br>20.... -<br>(ஊ) தற்போது பாடசாலையொன்றில் சேவையாற்றின் பாடசாலையின் பெயரும், சேவைக் காலமும் : | |
| 7.5 **அரச தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களின் பிள்ளைகள்**<br>(அ) இறுதியாக இடமாற்றம் பெற்ற திகதி<br>(ஆ) இடமாற்றம் தொடர்பான முன்னைய மற்றும் புதிய சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும்:<br>(இ) முதல் சேவை நிலையத்திற்கும் தற்போதைய சேவை நிலையத்திற்குமான தூரம் :<br>(ஈ) விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை:<br>(உ) அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபை/ அரச வங்கி அலுவலராக சேவைக் காலம்:<br>(ஊ) பெற்றுக் கொள்ளாத விடுமுறை நாட்கள்:<br>20.... -<br>20.... -<br>20.... -<br>20.... -<br>20.... - | |
| 7.6 **உரிய பிள்ளையுடன் வெளிநாடு சென்று திரும்புவோரின் பிள்ளைகள்**<br>(அ) வெளிநாட்டிலிருந்துவிட்டு மீண்டும் வீடு திரும்பிய திகதி :<br>(ஆ) வெளிநாட்டில் இருந்த கால எல்லை<br>............. திகதி தொடக்கம் .............. வரை<br>(இ) வெளிநாடு சென்ற காரணம் :<br>(ஈ) விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை : | |

**08. உறுதியுரை :**

எனது பிள்ளை எந்த அரசாங்க / தனியார் / அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையிலும் தற்பொழுது கல்வி பயில்வதில்லை என்பதை இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும், மேலேயுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், என்னால் மேலே குறிப்பிடப்பட்ட நிரந்தர வதிவிடம் பற்றியும் ஏனைய தகவல்கள் பற்றியும் திருப்திகரமான அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பதற்கு இணங்குகிறேன் எனவும் உறுதியளிக்கின்றேன். என்னால் தரப்பட்ட ஏதாவது விபரங்கள் உண்மையற்றதெனத் தெரிய வந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். எனது பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பின் விபரங்கள் உண்மையற்றவை / போலி எனத் தெரியவந்தால் எனது பிள்ளையை பாடசாலையிலிருந்து விலக்கி கல்வித் திணைக்களத்தின் மூலம் பெயர் குறிப்பிடப்படும் அதே பிரதேசத்திலுள்ள வேறொரு பாடசாலையில் சேர்ப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

திகதி :

.................................

தாய் /தந்தை /சட்டரீதியான பாதுகாவலரின் கையொப்பம்

பின்னிணைப்பு இல : 02

**அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதை அறியச் செய்யும் கடிதத்தின் மாதிரி**

பாடசாலை : ..........................................
முகவரி : ..........................................
திகதி : ..........................................

திரு/திருமதி/ ......................................
....................................................................
....................................................................

**முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் - 20....**

பிள்ளை அடங்கும் வகை ......................
இவ் வகைக்கு தீர்மானிக்கப்பட்ட வெட்டுப் புள்ளி:......................
பிள்ளை பெற்றுக் கொண்ட புள்ளி:.............

உமது பிள்ளையாகிய ................................................ இப்பாடசாலையின் முதலாம் தரத்தில் அனுமதிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

எனினும் தெரிவு பற்றி ஏதும் ஒழுங்கீனம் ஏற்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டால் இத் தெரிவு செல்லுபடியற்றதாகும் என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

அதிபர் ஒப்பம்

பதவி இலட்சினை :

பின்னிணைப்பு இல : 03

**நிராகரிக்கப்பட்டதென்பதை அறிவிக்கும் கடிதத்தின் மாதிரி**

பாடசாலை :................................
முகவரி :....................................
திகதி :........................................

திரு/ திருமதி/ ......................
..................................................
..................................................

**முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் 20......**

பிள்ளை அடங்கும் வகை :......................
இவ் வகைக்கு தீர்மானிக்கப்பட்ட வெட்டுப் புள்ளி:.............
பிள்ளை பெற்றுக் கொண்ட புள்ளி :-

உமது பிள்ளையாகிய ........................................................................................ இவ்வகைக்காக தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த புள்ளிகளை விடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக தெரிவு செய்யப்படவில்லை என்பதை வருத்தத்துடன் அறியத் தருகின்றேன். வேறு பாடசாலையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக .................................... வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கவும்.

முகவரி : ........................................
வலயக் கல்விக் காரியாலயம் : ..........................................

அதிபர் ஒப்பம்

பதவி இலட்சினை :